MCOP. 33 / 2023- PW1 .

திரு.சுரேஷ், த/பெ.அனுமையா

நாள்:18.09.2025.

குறுக்கு விசாரணை 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் :

நான் தாக்கல் செய்துள்ள மனு 2 வது எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில்**

விபத்தானது ஒரு இருசக்கரவாகனத்திற்கும் மற்றொரு இருசக்கரவானத்திற்கும் இடையே நடந்தது என்று சொன்னால் சரிதான். இரண்டு இருசக்கர வாகனங்களும் மோதியதால் நான் கீழே விழுந்துவிட்டேன் என்றால் சரி. நான் கீழே விழுந்த உடன் என் மீது கார் ஏறிவிட்டது. நாங்கள் புகார் கொடுக்கும் போது இருசக்கரவாகனத்தின் மீது தான் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். என் மீது இடித்த வாகனமானது Bajaj Discover வாகனம் என்றால் சரிதான். நான் ஓட்டி சென்ற வாகனத்தின் மீது எதிர் திசையில் வந்த இருசக்கரவாகனம் என் மீது மோதியது என்றால் சரிதான். Bajaj Discover வாகனம் என் வாகனத்தின் மீது மோதாமல் இருந்திருந்தால் இந்த விபத்து நடக்க வாய்பு இல்லை என்றால் சரிதான். இந்த மனுவிற்கு 3 மற்றும் 4 எதிமனுதாரர்கள் தேவயற்ற தரப்பினர் என்றால் சரியல்ல. எனக்கு இழப்பீடு கொடுக்கவேண்டும் என்றால் 1 வது மற்றும் 2 வது எதிர்மனுதாரர்கள் தான் தரவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. என் மீது ஏறிய காருக்கு ஓட்டுநர் உரிமம், காப்பீடு பாலிசி, போன்றவை விபத்து சமயத்தில் இருந்ததால் 3 வது எதிர்மனுதாரர் ஏதாவது எனக்கு இழப்பீடு தரவேண்டும் என இந்நீதிமன்றம் முடிவு செய்யும் பட்சத்தில் 3 வது எதிர்மனுதாரர் வாகனமான கார் ஆனது 4 வது எதிர்மனுதாரரின் நிறுவனத்தில் விபத்து சயமத்தில் காப்பீடு செய்யப்பட்டிருப்பதால் 4 வது எதிர்மனுதாரர் தான் 3 வது எதிர்மனுதாரருக்காக இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டபவல் அல்ல என்று சொன்னால் சரியல்ல. 3 வது எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை 4 வது எதிர்மனுதாரர் தரப்பில்**

**4 வது எதிர்மனுதாரர் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒம்./- எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.